# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண்.88/2023

**வா.சா.1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி- நாள் 16-03-2026

பெயர் = சீனிவாசன் **வா.சா.1**

**வா.சா.1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் கு.வி. தொடர்ச்சி-

(1) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளும் நீல, அகலம் அளவுகளும் மற்றும் இயற்கை அமைப்புகளும் புமியில் உள்ளவாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, தவறு. முந்தைய ஆவண அளவுகளுக்கு முரண்பட்டு எனக்கு ஆவணம் ஏற்பட்டள்ளதை வைத்துதான் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்ட அடி அளவுகளில் முரண்கள் உள்ளதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட ஆவணத்தில் வடபுறம் கிழமேல் அடி 27 ஆக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வடபுறம் கிழமேல் அடி 29 1/2 அடியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியமளித்தார்.

(2) பி.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தும் ஒரே சொத்து என்றால் சரிதான். அந்த வகையில் 27 அடியை விட 29 1/2 அடி கூடுதல் என்றால் சரிதான். மேல்முறையீட்டு வழக்கு நிலுவையிலிருந்த சமயம் கூடுதலான அடி அளவுகளை குறிப்பிட்டு வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக் கொடுக்க எனது தாத்தா, பாட்டிக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் பிரதிவாதியின் தாயார் அவருடைய மேற்கு சுவரை பராமரிப்பதற்கு உரிமை வழங்கி 2 வது மேல்முறையீட்டு வழக்கில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு உத்தரவின் அடிப்படையில் இன்றுவரை பிரதிவாதியை பராமரிக்க விடவில்லை

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.16 17:53:48 +0530

என்றால் பராமரிக்க விட்டோம், மேற்கு சுவரில் பிரதிவாதி ஜன்னல், வாய்க்கால் ஆகியவற்றை அமைக்க முற்பட்டதால் எனது தாயார் அனுமதிக்கவில்லை.

(3) தாவா சொத்தில் என்னுடைய அனுமதி இல்லாமல் யாரும் நுழைய முடியாத அளவில் ஒரு சுவர் எழுப்பியுள்ளேன் என்றால் சரிதான், என்னுடைய சந்து அதனால் எழுப்பியுள்ளேன். தாவா சொத்தில் இரும்பாலான கதவு அமைத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் சுவர், இரும்புக்கதவு ஆகியவற்றை எப்போது அமைத்தேன் என்றால் எனது தாத்தா அமைத்துக் கொடுத்தார். தாவா சொத்தில் சுவர், இரும்புக்கதவு ஆகியவற்றை எனது தாத்தா அமைத்திருந்தால் மேற்படி விபரம் முந்தைய வழக்கிலேயே குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும், தற்போது பிரதிவாதியை தாவா சொத்தில் புழங்கவிடாமல் தடுப்பதற்காக நான் அமைத்துவிட்டு எனது தாத்தா அமைத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(4) வழக்கு சொத்தை தவிர்த்து எனது சொத்திலுள்ள கட்டிடத்தின் வடபுறம் கிழமேல் அடி எவ்வளவு என்றால் 26 அடியாகும். எனது கட்டிடத்திற்கு மேற்கே எனக்கு பாத்தியப்பட்ட சந்து எவ்வளவு அடி உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது சொத்திற்கு மேற்கே அழகர்சாமி நாயக்கரின் சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கு மேற்குபக்க பயன்பாட்டை அழகர்சாமி நாயக்கர் தடுக்கவில்லை என்றால் சரிதான், சாட்சி பின்பு தன்னிச்சையாக தடுக்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது என்று சாட்சியமளித்தார். எனது தாத்தாவிடமிருந்து சொத்தை எழுதி வாங்கிய பின்பு தாத்தாவின் வீட்டை இடித்து புதிதாக நான் கட்டிடம் கட்டும்போது மேற்படி அழகர்சாமி நாயக்கர் என்னை தடுக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(5) எனக்கு பாத்தியமான அடி அளவுகளை விட கூடுதலான அளவுகளை காட்டி ஆவணம் ஏற்படுத்திக் கொண்டு கட்டிடம் கட்டியதாலும், அந்த வகையில் பிரதிவாதியை இடையூறு செய்வதாலும், மேற்குபக்க அடி அளவுகளை ஒப்புக்கொண்டால் எனக்கு பாதகமாகிவிடும் என்பதால் எனக்கு தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மேற்கு சுவரில் வைக்கப்பட்ட ஜன்னல் கதவுகள் பிரதிவாதியின் வீட்டிற்குள் உள்ளவாறுதான் அமைக்கப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி மேற்கு சுவரில் ஜன்னல் அமைக்கவே

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.16 17:53:55 +0530

இல்லை, சாட்சி பின்பு தன்னிச்சையாக எனக்கு தெரியாது என்று சாட்சியமளித்தார். பிரதிவாதியின் மேற்கு சுவரில் ஜன்னல் உள்ளது என்றும், மேற்படி ஜன்னல் எனக்கு இடையூறு இல்லாத வகையில் உள்ளது என்றும், அதனை ஒப்புக்கொண்டால் எனக்கு பாதகமாகிவிடும் என்பதால் தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(6) பொதுவாக ஒரு சுவர் பொதுச் சுவராக இருக்கும் பட்சத்தில் மேற்படி சுவரில் ஜன்னல் வைக்கக்கூடாது என்று சொல்ல இயலும் என்றும், சந்தாக இருக்கும் பட்சத்தில் திறந்த வெளியில் ஜன்னல் வைக்கக்கூடாது என்று சொல்வதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது சொத்திற்கு மேற்கு பக்கம் எனக்கிருக்கும் அதே வசதியுரிமை பிரதிவாதிக்கும், அவர் வீட்டு மேற்கு பக்கம் உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அளக்கும்போது வருவாய்துறை அதிகாரிகள் வழக்குச் சொத்தினை துல்லியமாக அளவீடு செய்ய முடியாத அளவு சர்வே Error உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மேற்கிலிருந்து அளக்கும்போதும் சர்வே Error ஏற்பட்டுள்ளது என்றும், கிழக்கிலிருந்து அளக்கும்போது சர்வே Error ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆணையர் அறிக்கையை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியமளித்தார்.

(7) நான் முந்தைய ஆவணத்திற்கு முரண்பட்டு கட்டிடம் அமைத்துள்ளதால்தான் சர்வே Error ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நகராட்சி கட்டிட வரைபட அனுமதிக்கு முரண்பட்டு நான் கட்டிடம் எழுப்பியுள்ளதால்தான் சர்வே Error ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி மேற்குபக்கம் 1 1/2 அடி ஆக்கிரமித்து இடம் கட்டியதால் மேல்முறையீட்டு வழக்கு உத்தரவின்படி மேற்குபக்க சுவரை பிரதிவாதி பராமரிக்கக்கூடிய உரிமையை இழந்துவிட்டார் என்று எங்கள் தரப்பில் ஆணையரிடம் தகவல் அளிக்கப்பட்டது என்பதால் எந்த வகையில் ஆக்கிரமிப்பு என்று சொல்லியுள்ளோம் என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதி கட்டிய புது கட்டிடத்தில் இன்னும் குடிவரவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, நான் அங்கு வசிக்கவில்லை அதனால் தெரியாது.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.16 17:54:01 +0530

(8) பிரதிவாதி கட்டிய ஜன்னல்கள் மூலமாக துர்நாற்றம் வருவதாக வழக்கறிஞர் ஆணையரிடம் எங்கள் தரப்பில் தகவல் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி அவரது கட்டிடத்தில் இன்றுவரை குடியிருக்கவில்லை என்றும், நாங்கள் பிரதிவாதியின் வீட்டிற்கு வாய்க்கால் ஆகியவற்றை தாவா சொத்தில் அமைக்க விடாமல் தடுப்பதால் பிரதிவாதிகள் மேற்படி வீட்டில் குடியிருக்க இயலவில்லை என்றும், பிரதிவாதி அவரது வீட்டில் குடியிருக்காதபோது துர்நாற்றம் வருவதாக நாங்கள் கூறுவது மிகைப்படுத்தி பிரதிவாதியை குற்றம் சுமத்தும் வகையில் உள்ளது என்றால் சரியல்ல, பிரதிவாதி குடியிருந்தால்தான் துர்நாற்றம் வரவேண்டிய அவசியம் இல்லை என்றும், அங்கு வேலை பார்ப்பவர்களால்கூட துர்நாற்றம் வர வாய்ப்பு உள்ளது.

(9) எங்களது தெருவிற்கு சாக்கடை கால்வாய் எனது வீட்டிற்கு வடக்கே கிழமேலாக உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் கழிவு நீரை கடத்துவதற்கு எனது வீட்டின் கிழக்குச் சுவரில் பைப் அமைத்து மேற்படி சாக்கடை கால்வாயை கடத்துகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டு மேற்கு சுவரில் சந்தில் கழிவு நீர் படாத வகையில் பைப் அமைத்து, கழிவு நீரை கடத்துவதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். 2ம் மேல்முறையீட்டு வழக்கின் உத்தரவின்படி பிரதிவாதிக்கு பைப் அமைப்பதற்கான உரிமை உள்ளது என்றால் சரியல்ல, பராமரிப்பு என்றால் பெயிண்ட் அடிப்பதற்கு உரிமை உள்ளது. பெயிண்ட் அடிப்பதற்கு உரிமை உள்ளது என்று 2ம் மேல்முறையீட்டு வழக்கு உத்தரவில் இல்லை என்றும் நானாகத்தான் பராமரிப்பு என்றால் பெயிண்ட் அடிப்பதற்கு உரிமை உள்ளது என்று சொல்கிறேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(10) 2வது மேல்முறையீட்டு வழக்கு உத்தரவில் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட உரிமையை எனது பெற்றோர் தடுப்பதும், நான் தடுப்பது போன்றுதான் என்றும் 2ம் மேல்முறையீட்டு வழக்கின் உத்தரவை மீறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை தீர்மானிக்க இயலவில்லை என்று வருவாய் அதிகாரிகளால் சொல்லப்பட்ட சொத்திற்கு விளம்புகை கேட்பது ஏற்புடையதல்ல என்றும், மேற்படி சொத்தில் விளம்புகை கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது சட்ட முரணான செயல்பாடுகளால்தான் வழக்கு சொத்தை

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.16 17:54:08 +0530

தீர்மானிக்க முடியாத நிலையில் உள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.16 17:54:13 +0530